பக்கங்கள் 6 விலை சதம் 40 ★

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 20 மாசி 9 ரபி அவ்வல் 12 இதழ் 11
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 21-2-78

சன்சயின் சோப்
யாழ்ப்பாண பஜார்
கடைகளில் பெற்றுக்
கொள்ளலாம்.
இது ஒரு லாலா
தயாரிப்பு
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

## முதலமைச்சர் நடிக்கலாமா? சட்டசபைக்கு விவாதம் வருகிறது

சென்னை, பெப். 20

தமிழ்நாட்டின் முதலமைச்சராக இருப்பவர் திரைப் படத்தில் நடிக்கலாமா? இது குறித்துத் தமிழ்நாடு சட்டசபைக் கூட்டத்தில் விவாதிக்க எதிர்க் கட்சியினர் முன்வந்துள்ளனர். இச்சர்ச்சை குறித்து அடுத்த சில தினங்களில் விவாதம் நடைபெறலாமென்று எதிர் பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு சட்டசபைக் கூட்டம் இன்று நடைபெற்ற போது, நிதியமைச்சர் திரு. நாஞ்சில் மனோகரன் 78-79ம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சபையில் சமர்ப் பித்தார். ஒன்பதரைக் கோடி ரூபா கூடுதல் வரி விதிப்புக் களுக்கு யோசனை தெரிவித்த நிதியமைச்சர்; துண்டுவிழும் தொகையான 34 கோடி ரூபாவை எவ்விதமாகச் சமாளிக்கலாம் என்பது பற்றியும் யோசனைகள் வெளியிட்டார். இதனுடன் அரசு இவ்வாண்டில் நிறைவேற்றப்போகும் பல்வேறு திட்டங்கள் பற்றியும் விளக்கிக் கூறினார்.

"மதுரையில் இசைக்கல்லூரி நிறுவப்படும். மாணவ நாட

[6ம் பக்கம் பார்க்க]

### சோயா அவரைச் செய்கை:

# சர்வதேச ரீதியில் யாழ்ப்பாணம் மிகச் சிறந்த இடமாகத் தெரிவு!

## திருநெல்வேலி பாராட்டுப்பெறுகிறது

(யாழ்ப்பாணம்)

**சோயா அவரைச் செய்கை குறித்து விவசாய நிபுணர்கள் நடத்திய சர்வதேச ஆராய்ச்சியில், யாழ்ப் பாணமும்—திருநெல்வேலி முத லிடத்தைப் பெற்றுள்ளது!**

விவசாய நிபுணர்கள் நடத்திய சர்வதேசஆய்வின்மூலம் சோயா அவரைச்செய்கையில் இலங்கை சிறந்த இடமாகத் தெரிவுசெய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து நாட்டின் முக்கிய சில பகுதிகளில் பரீட்சார்த்தமாக சோயா அவரை பயிரிடப்பட்டது.

யாழ்ப்பாணம், திருநெல்வேலியில் பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்ட சோயா அவரைச் செய்கையில், எதிர்பாராத பலன் கிடைத்திருக்கிறது.

ஒரு ஏக்கரில் 5,500 முத்தல் சோயாஅவரை திருநெல்வேலியில் கிடைத்து 'சாதனை' ஏற்படுத்தியிருக்கிறது.

'பைலட் பிரேம்நாத்'

## எடுத்த எடுப்பிலேயே முதல்காட்சி 'ஓகே' ஆனது!

### 23-ல் விஜயாவில் படப்பிடிப்பு

(கொழும்பு)

'பைலட் பிரேம்நாத்' படத்தின் முதல் படப்பிடிப்பு, நேற்றுக் காலை, ரன்முத்து ஹோட்டலில் குறிப்பிட்ட சுப வேளையில் நடைபெற்றது.

முதற் காட்சியிலே நடிகர் திலகம் சிவாஜி கணேசனும், ஸ்ரீதேவியும் கலந்துகொண்டனர். எடுத்த எடுப்பிலேயே காட்சி "ஓகே" ஆனது.

இப்படத்தில், சிவாஜியின் குருட்டுப் பெண்ணாக ஸ்ரீதேவி நடிக்கின்றார்.

இலங்கை-இந்தியக் கூட்டுத் தயாரிப்பான இப்படத்தில் கதாநாயகனை நடிக்கும் சிவாஜி, கடந்த சனிக்கிழமை இலங்கை வந்தார். இன்று படத்தின் மற்றைய முக்கியமான நடிகர்கள் ஈழம் வருகின்றார்கள்.

விஜயா ஸ்ருடியோவில் 23ந் தேதி காட்சிகள் படமாக்கப் படும். அது வரையில் வெளிப் புறக் காட்சிகளே படமாக்கப் படும்.



## இடதுசாரித் தலைவர்கள் யாழ். வருகிறார்கள்

(யாழ்ப்பாணம்)

இடதுசாரி ஐக்கிய முன்னணி தலைவர்களான டாக்டர் என். எம். பெரேரா, திருவாளர்கள் பீட்டர்கெனமன், ரி. பி. சுபசிங்கா ஆகியோர் நீண்டகாலத்துக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்கள்.

இவர்கள் கலந்துகொள்ளும் இடதுசாரி ஐக்கிய முன்னணியின் பொதுக்கூட்டம் நாளை புதன்கிழமை மாலை யாழ்ப்பாணம் முற்றவெளியில் நடைபெறவிருக்கிறது.

திரு. பொன் நாகலிங்கம் தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் அரசுஅரிசி, சீனியை வெட்டி கூப்பனைப் பறித்ததை எதிர்த்தும், ரூபாய் மதிப்பைக் குறைத்ததை எதிர்த்தும், தொழிற்சங்க உரிமைகளைப் பறித்ததைக் கண்டித்தும், விலைவாசிகளின் உயர்வை கட்டுப்படுத்தக் கோரியும், ஆகஸ்ட் கலவரத்தில் பொலிசார் நடந்து கொண்ட விதத்

[6ம் பக்கம் பார்க்க]

## ஜனாதிபதி ஜே. ஆர். இன்று திரும்புகிறார்

சிங்கப்பூர், பெப். 20

சிட்னி மகாநாட்டில் கலந்துகொண்டுவிட்டுத் தாயகம் திரும்பும் வழியில், இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனா இன்று சிங்கப்பூர் வந்து சேர்ந்தார்.

இலங்கை ஜனாதிபதிக்கும், அவரது பாரியாருக்கும் சிங்கப்பூர் பிரதமர் இன்று இராப்போசன விருந்தளித்தார். சிங்கை ஜனாதிபதி நாளை மதிய போசன விருந்தளிப்பார்.

ஜனாதிபதி ஜே. ஆர். ஜயவர்த்தனா நாளை செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 9-00 மணியளவில் இலங்கை போய்ச் சேருவாரென்று எதிர்பார்க்கப்படுகிறது.

(யாழ்ப்பாணம்)

தமிழர் விடுதலைக் கூட்டணியின் கருத்தரங்கொன்று நாளை மாலை காரைநகர் செல்லப்பா வேலுப்பிள்ளையின் இல்லத்தில் நடைபெறவுள்ளது. இக்கருத்தரங்கில் "வரலாற்றில் நாம்" என்னும் தலைப்பில் ஈழவேந்தனும், "தமிழ் ஈழவிடுதலைப் போராட்டத்தில் எம் பங்கு" என்னும் தலைப்பில் கோவை மகேசனும் உரையாற்றுவர்.

### பத்து ரூபா கேட்டு விளைந்ததாம் விபரீதம்!

# வாள்வீச்சு - கத்திக்குத்து; சுழிபுரத்தில் இருவர் கொலை!

[யாழ்ப்பாணம்]

சுழிபுரம் மேற்கு இருத்தலடிச் சந்தியில் நேற்று முன்தினம் நிகழ்ந்த கோர வாள் வெட்டு, கத்திக்குத்து சம்பவங்களில் இருவர் பலியானார்கள்.

மேற்படி இருவரில் தந்தையின் உயிர் ஆஸ்பத்திரியிலும் தனயனின் உயிர் ஸ்தலத்திலும் பிரிந்தது.

இச்சம்பவங்கள் தொடர்பாக சங்கானை பொலிஸ் நிலைய குற்றப்பிரிவுக் கான்ஸ்டபிள் திரு, எம் எல். குணரத்ன பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரியின் உதவியுடன் நடத்தி வரும் தீவிர புலன் விசாரணை கள்மூலம் தெரியவருவதாவது:

சுழிபுரம் இருத்தலடியைச் சேர்ந்தவர்களான சின்னப்பொடி வீரபுத்திரனும் சின்னப்பொடி முருகேசுவும் சகோதரர்கள்.

சம்பவதினத்தன்று மாலை சந்தேகநபர்களான எஸ். தங்கப்பனும், எஸ். செல்லையாவும் இருத்தலடிச் சந்திக்கு அருகில் சாராயம் குடித்துக்கொண்டிருக்கக் காணப்பட்டனராம்.

சந்தேகநபர்கள் வீரபுத்திரனிடமும் முருகேசுவிடமும் சென்று பத்துரூபா தருமாறு கேட்டனராம். அதற்கு அவர்கள் மறுக்கவே வாக்குவாதம் எழுந்ததாம். இதனையடுத்து சந்தேகநபர்கள் ஓடிச்சென்று வாளும் கிறிஸ்கத்தியும் எடுத்துவந்தனராம்.

முருகேசுவுக்குக் கத்திக்குத்தும், வீரபத்திரனுக்கு வாள் வெட்டும் விழுந்ததாம். அந்நேரம் வீரபத்திரன்; முருகேசு ஆகியோரது சகோதரரான நடேசு என்பவர் ஓடிவந்தாராம் அவருக்கும் கத்திக்குத்து விழுந்ததாம். அதேநேரத்தில் அங்குவந்த இவர்களின் தந்தை மாணிக்கம் சின்னப்பொடிக்கும் வாள்வெட்டு விழுந்ததாம். சின்னப்பொடி யாழ். பெரியாஸ்பத்திரியில் மரணமானார். முருகேசுவின் உயிர் ஸ்தலத்திலேயே பிரிந்தது.

இச்சம்பவங்களின்போது

[5-ம் பக்கம் பார்க்க]

உ
கீரிமலை
ஸ்ரீநகுலாம்பிகா சமேத நகுலேஸ்வர
ஆலய மஹோற்சவம்

22-2-78 புதன்கிழமை — கொடியேற்றம்
7-3-78 செவ்வாய் பகல் — இரதோற்சவம்
இரவு — சிவராத்திரி உற்சவம்
8-3-78 புதன் உதயம் — தீர்த்தோற்சவம்
10-3-78 வெள்ளி — பூங்காவனம்

8568

## வரி விளம்பரம்

### தேவை

சோடா பெட்டி ஏற்றி இறக்கி அனுபவமுள்ள தொழிலாளர்களும், லொறியில் வேலை செய்யக்கூடிய தேர்ச்சியும், அனுபவமும் உள்ள கிளீனர்களும் தேவை. . விபரங்களுக்கு நேரில் வரவும். பிள்ளையார் ஸ்ரோர்ஸ், இல: 31. மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம். 8556

### விற்பனைக்கு

விவசாயிகளின் நலன் கருதி நீமியா உரத்தின் விலை குறைக்கப்பட்டுள்ளது. 10 றுத்தல் கொண்ட பைக்கற் ஒன்றின் விலை ரூபா 5/- மட்டுமே. கூடுதல் கொள்வனவிற்கு விசேட கழிவுண்டு. மில்க்வைற். யாழ்ப்பாணம். 8555

மூன்று பேஸ் மோட்டரில் இணைக்கப்பட்ட 2 இஞ்சி புத்தம் புதிய தண்ணீர் பம்புகளும், றக்ரர் பெட்டிகளுக்கு இணைக்கும் புத்தம் புதிய துலாக்களும் விற்பனைக்கு உண்டு. 'ஸ்ரார், 233, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம்' என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். தொலைபேசி- 7352. 8565

### வாடகைக்கு

டாக்டர் ஒருவருக்கு நவீன வசதிகள் உள்ள இரண்டு-ஆறு அறைகள் உள்ள வீடு யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்கு அண்மையில் வாடகைக்கு தேவை. விபரங்களுக்கு: 21/1, ஸ்ரான்லி றேட், யாழ்ப்பாணம். 8547

யாழ். வளாகச் சந்தியில் (பலாலி வீதி இராமநாதன் வீதி சந்திப்பு) நவீன வசதிகளுடன் கூடிய கடை (ECO BAR) வாடகைக்கு உண்டு. விபரங்கட்கு- திருமதி K. தனபாலசிங்கம், 11, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம். 8566

## பரு. எம். பி. யிடம் கோரிக்கை

[நெல்லியடி]

பருத்தித்துறை தொகுதியில் அமைக்கப்பட்ட கம்பாவத்தை குடியேற்றத்திட்டத்தில் வீடுகளை அமைத்துத் தருமாறு மேற்படி குடியேற்றத்திட்ட வாசிகள் பருத்தித்துறை தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு க. துரைரத்தினத்திடம் கோரியுள்ளார்கள்.

யாழ்ப்பாணம் அரசாங்க அதிபருடன் இது விடயமாக தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்க அவர் சம்மதம் தெரிவித்துள்ளார். [உ]

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபையின் 651வது இலங்கை சுவீப் முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**08 V 0324**
ரூபா 1,00,000

இரண்டாவது பரிசு
**08 B 0604**
ரூபா 40.000

மூன்றாவது பரிசு
**19 K 0953**
ரூபா 10, 000

தலா 1,700 ரூபா ஆறுதல் பெறும் 100 டிக்கட்டுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 01 A 0577 | 02 A 0546 |
| 37 A 0562 | 38 A 0684 |
| 40 A 0551 | 10 B 0490 |
| 37 B 0820 | 39 B 0732 |
| 49 B 0750 | 51 B 0349 |
| 52 B 0525 | 20 C 0024 |
| 2? C 0907 | 29 C 0150 |
| 34 C 0909 | 57 C 0862 |
| 64 C 0769 | 04 D 0157 |
| 62 D 0436 | 12 E 0499 |
| 16 E 0525 | 48 E 0004 |
| 52 E 0499 | 56 E 0841 |
| 58 E 0979 | 06 F 0123 |
| 12 F 0403 | 18 F 0319 |
| 56 F 0167 | 56 F 0471 |
| 02 G 0612 | 11 G 0045 |
| 47 G 0251 | 63 G 0476 |
| 05 H 0810 | 36 H 0453 |
| 49 H 0673 | 06 J 0344 |
| 19 J 0229 | 14 K 0219 |
| 55 K 0227 | 07 L 0462 |
| 28 L 0794 | 54 L 0914 |
| 59 L 0054 | 63 L 0076 |
| 30 M 0770 | 30 M 0781 |
| 31 M 0756 | 38 M 0057 |
| 39 M 0977 | 40 M 0122 |
| 40 M 0531 | 52 M 0938 |
| 61 M 0378 | 64 M 0363 |
| 34 N 0633 | 54 N 0296 |
| 27 O 0865 | 31 O 0456 |
| 41 O 0976 | 58 O 0374 |
| 12 P 0890 | 48 P 0382 |
| 18 Q 0748 | 34 Q 0963 |
| 35 Q 0540 | 26 R 0287 |
| 35 R 0281 | 58 R 0596 |
| 01 T 0737 | 19 T 0975 |
| 63 T 0032 | 38 U 0502 |
| 13 V 0722 | 30 V 0930 |
| 36 V 0967 | 38 V 0726 |
| 50 V 0615 | 11 W 0733 |
| 22 W 0213 | 46 W 0317 |
| 49 W 0180 | 02 X 0959 |
| 16 X 0378 | 22 X 0636 |
| 35 X 0828 | 36 X 0501 |
| 41 X 0286 | 45 X 0661 |
| 63 X 0955 | 14 Y 0510 |
| 15 Y 0812 | 41 Y 0182 |
| 43 Y 0684 | 54 Y 0814 |
| 60 Y 0087 | 60 Y 0808 |
| 39 Z 0291 | 47 Z 0576 |

[இவை யாவும் உறுதிப்படுத்தப்படவேண்டும்].

## மகஜர்

[நெல்லியடி]

புலோலியில் இயங்கிவரும் விவசாயப் பெருக்கக்குழுக் காரியாலயத்தில் கடமையாற்றும் ஊழியர்களுக்கு சீரான சம்பளம் வழங்கப்படவில்லை என பருத்தித்துறைத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. க. துரைரத்திடம் புகார்செய்யப்பட்டுள்ளது.

அங்கு கடமையாற்றும் ஊழியர் கோஷ்டி ஒன்று அண்மையில் தேசிய அரசுப் பேரவை உறுப்பினரைச் சந்தித்து மகஜர் மூலம் தமது நிலையை எடுத்து விளக்கியுள்ளது. இம்மகஜரில் 90 ரூபா அலவன்ஸ் வழங்கப்படாததும் அண்மையில் அரசினால் வழங்கப்பட்ட 50 ரூபா சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை எனவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளதாம். தமக்கு நிர்ணயிக்கப்பட்ட சம்பளம் ஒன்றை வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் அம்மகஜர் தேசிய அரசுப்பேரவை உறுப்பினரைக் கோரியுள்ளது.

...

## விசித்திர பசுக்கன்று கண்காட்சி

[வண்ணார்பண்ணை]

இரண்டு முகங்களும், மூன்று கண்களுமுடைய விசித்திரப் பசுக்கன்று ஒன்று யாழ்ப்பாணத்தில் கண்காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளது.

கந்தரோடையைச் சேர்ந்த ஒருவரது இந்த மூன்றுமாதப் பசுக்கன்று யாழ்ப்பாணம் முனியப்பர் வீதியில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

கந்தரோடை விரகத்திப் பிள்ளையார் கோவிலைச் சேர்ந்திலர் இவ்வாலயகட்டிட நிதிக்காக இக்காட்சியை இங்கு நடத்துகின்றனர். [அ]

## வாராந்தக் கருத்தரங்கு

[யாழ்ப்பாணம்]

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைப் பணிமனையில் எதிர்வரும் சனிக்கிழமை மாலை வாராந்தக் கருத்தரங்கு சட்டத்தரணி திரு. மு. ஆலாலசுந்தரம் தலைமையில் நடைபெறவிருக்கிறது.

"தமிழீழத்தின் பொருளாதாரம்" என்னும் பொருள் பற்றி திருவாளர்கள் சு. பரநிருபசிங்கம், க. சச்சிதானந்தம் ஆகியோர் பேசுவர். [உ]

......

## விளையாட்டு விழா

[அரியாலை]

யாழ்ப்பாணம் வை. எம். சி. ஏ. ஸ்தாபனத்தாரின் 11வது வருடாந்த உள்ளரங்கு விளையாட்டுவிழா எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவிருக்கிறது.

பூப்பந்தாட்டம், டேபிள் டெனிஸ், கரம் என்பனவும், வேறுபல உள்ளரங்கு விளையாட்டுகளும் நடைபெற விருக்கின்றன. பாடசாலை மாணவ-மாணவிகளுக்கும், ஏனைய ஆண் பெண்களுக்கும் தனித்தனியாகப் போட்டிகள் நடைபெறவிருக்கின்றன.

யாழ்ப்பாண வை. எம். சி. ஏ. மண்டபத்தில் நடைபெற விருக்கும் இப்போட்டிகளில் பங்குபெற விரும்புவோர் செயலாளருடன் தொடர்புகொள்ளும் படிகேட்கப்படுகின்றனர். (உ)

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

நெல் மோசடி வழக்கு:

## எதிரிக்கு ஒன்பது மாதக் கடூழியச் சிறை

[மட்டங்களப்பு]

கூட்டுறவுச் சங்கமொன்றின் காரியாலய 'பியூனு'க கடமையாற்றி. நெற்களஞ்சிய முகாமையாளரான ஒருவர் ரூபா 5,487 பெறுமதியான நெல்லை மோசடி செய்ததாக 9 மாத கடூழியத்தை சிறைத் தண்டனையாகப் பெற்றார்.

ஈச்சந்தீவு - கன்னன் குடா ப. நோ. கூ. சங்கத்தில் காரியாலய. பியூனை நல்லதம்பி என்பவரே மேற்படி தண்டனையைப் பெற்றவராவார். இவர் ஆயித்தியமலை கூட்டுறவு நெல் கொள்வனவு நிலையத்தில் நாவற்காடு-வி. தங்கத்துரை என்பவரது நெல்லை கொள்வனவு செய்து மோசடி செய்ததாக குற்றஞ் சாட்டப்பட்டு வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

இக் குற்றச்சாட்டு மட்டக்களப்பு மாவட்ட நீதிபதி திரு. சி. க. மனோகரா முன்னிலையில் விசாரணைக் கெடுத்துக்கொள்ளப்பட்டது. விசாரணையின் போது குற்றவாளியாக காணப்பட்ட நல்லதம்பிக்கு 9 மாத கடூழிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. (உ)

## "சகோதரத்துவத்தை நிலை நாட்டுவீர்"
### பிரதமருக்கு வள்ளுவர் மகாசபை கோரிக்கை

[அரியாலை]

"ஏழைமக்களின் மத்தியில் தோன்றி, ஏழைகளின் துயர் துடைத்து கொழும்பு மத்திய தொகுதியின் முதலாவது உறுப்பினராக இருக்கும் நீங்கள் நம்நாட்டின் பிரதம மந்திரியாக உயர்த்தப்பட்டிருப்பதையிட்டு நாம் மகிழ்வெய்துவதுடன் எமது பாராட்டையும் தெரிவித்துக்கொள்கிறோம். தாங்கள் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள பெரும் பொறுப்பினை நேர்மையும், நெஞ்சுரமும் மிக்கமுறையில் செயலாற்றி இந்நாட்டில் வாழும் சகல இனமக்களும் சந்தோஷமாகவும், சகோதரமாகவும் வாழத் தங்களது பதவிப்பொறுப்பை பாவிப்பீர்கள் என்று நம்புகிறோம். உங்களுக்கு ஆண்டவன் நீண்ட ஆயுளையும், நல்ல சரீரக பெலத்தையும் அளிப்பாராக"

அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் பொது நிர்வாக சபையில் பிரதம மந்திரிக்கு வாழ்த்துத் தெரிவித்து மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மீசாலையில் மகாசபை உப தலைவர் திரு. பி. எசேக்கியல் தலைமையில் நடைபெற்ற நிர்வாக சபையில் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த ஆயிரம் மாணவர்களுக்கு சர்வகலாசாலையில் இடமளிக்க விசேட ஏற்பாடொன்றை அமுல் நடத்த முன்வந்திருக்கும் கௌரவ கல்வியமைச்சருக்கும், சர்வகலாசாலை செனட்டுக்கும் நன்றி தெரிவிக்கும் இம்மகாசபை வடக்குக் கிழக்கு மாகாணங்களில் வாழும் கல்வியில் பின்தங்கிய வள்ளுவ சமூகத்தைச் சேர்ந்த ஐந்து மாணவர்களுக்கு அளிக்கும் சலுகைபோல சலுகை அளித்து சர்வகலாசாலையில் அனுமதி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று இம் மகாசபை கோருகின்றது என்ற கோரும் தீர்மானமும் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

எதிர்வரும் 25-ம் திகதி ஞாயிற்றுக்கிழமை சுன்னாகத்தில் வள்ளுவர்தின விழாவை மிக விமரிசையாகக் கொண்டாடுவதென்றும், சித்திரை மாதம் 9ம், 10ம் திகதிகளில் திருவள்ளுவர் மகாசபை கல்விச்சகாய நிதிக்காகப் பரந்த அளவில் கொடித்தினம் ஒன்றை நடாத்துவதென்றும் அகில இலங்கைத் திருவள்ளுவர் மகாசபையின் பொது நிர்வாகசபையில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. [உ]

"பிள்ளைகளைப் பாடசாலையில்

## சேர்ப்பதுடன் மட்டும் கடமை முடிகிறதா?"

[அரியாலை]

"நாம் ஒவ்வொருவரும் ஒருவரை ஒருவர் அறிந்துகொள்வதுடன் மற்றவர்களுடைய உணர்ச்சிகளுக்கும் மதிப்பளிக்கவேண்டும். இதன் மூலம் எம்மிடையே ஏற்படும் சகல பிரச்னைகளுக்கும் தீர்வு காண முடியும் இக்கொள்கை சமூகங்களுக்கு மட்டுமல்ல நாட்டுக்குமே பொருந்தும். பெற்றோர் தம் பிள்ளைகளை கல்லூரிகளில் சேர்த்து விட்டால் போதுமென்றமனவுணர்வுள்ளவர்களாக இருக்கிறார்கள். பிள்ளைகள் கல்வியிலும், ஒழுக்கத்திலும் எப்படி வளர்ந்து வருகிறார்கள் என்பதைக்கூட சில பெற்றோர்கள் அறிய விரும்புகிறார்களில்லை. இதனால் தான் நாட்டில் மாணவர்களிடையே ஒழுக்க சீர்கேடுகளும், பிரச்னைகளும் தோன்றுகின்றன."

இவ்வாறு யாழ்ப்பாணம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு யே எஸ் அரியரத்தினம் அரியாலை மேற்கு காந்தி சனசமூக நிலைய வெள்ளிவிழா அரங்கில் நடைபெற்ற கதம்ப விழாவில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

நிலையத்தலைவர் திரு. த. இராமலிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது.

## மகாஜன விடுதிச்சாலை வெள்ளிவிழா

[பண்டத்தரிப்பு]

"கல்லூரிக் கல்வியின் முக்கியமான ஒரு அம்சமாக விடுதிச்சாலை வாழ்க்கை அமைகின்றது. ஒரு கல்லூரியின் வளர்ச்சிக்கு மிகப் பிரதானமான அங்கமாக விளங்க வேண்டியது மாணவர்கள் தங்கியிருந்து படிக்கும் வசதிகள் பலவும் வாய்ந்த விடுதிச்சாலையே ஆகும்" என்று தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி விடுதிச்சாலை வெள்ளி விழா வைபவத்தில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகையில் தொழில் அதிபர் திரு. க. கனகராசா குறிப்பிட்டார். திரு சு. சிவராஜன் தலைமையில் நடைபெற்ற இவ் வெள்ளிவிழாவில் புதிதாக நிறுவப்பட்ட வெள்ளிவிழா மண்டபத்தை புலவர் நா, சிவபாதசுந்தரனார் சம்பிரதாய பூர்வமாக திறந்துவைத்தார் [அ]

## அறிவித்தல்

### இலங்கை வங்கி ஊழியர் சங்கம்
(யாழ். மாவட்டம்)

19-02-78 ந் திகதி நாடத்திய அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் பரிசு பெற்றோர் விபரம் வருமாறு:

**பரிசுகள்**

1-ம் பரிசு: 3981 V. தங்கவேல், கரவெட்டி.
2-ம் பரிசு: 13171 R. முருகேசு, யாழ்ப்பாணம்.
3 ம் பரிசு: 13355 T. F. அலோசியஸ், யாழ்ப்பாணம்.

**ஆறுதல் பரிசுகள்**

21533 செல்வன் A. பிரதீபன், சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்.
4118 A. குலவீரசிங்கம், பருத்தித்துறை.
15881 றிபைன் & கோ, பெரியகடை, யாழ்ப்பாணம்.
14522 R. G. குணரட்ணம், யாழ்ப்பாணம்.
13762 K குணசிங்கம், கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

பரிசு பெற்றோர் அதிர்ஷ்டலாபச் சீட்டுடனும் தகுந்த அத்தாட்சியுடனும் கீழ் குறிப்பிட்டுள்ளவரில் ஒருவரைச் சந்திக்கவும்

M. L. M. கலீல், மக்கள்வங்கி, நவீனசந்தை, யாழ்ப்பாணம்.
K. தில்லைநடராஜா, இலங்கை வங்கி, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

3567

ஈழநாடு
The Eelanaadu

## உற்பத்தி ஆண்டில் சிந்திப்பதற்கு!

இவ்வருடம் உற்பத்தி ஆண்டாகப் பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது.

இந்தச் சந்தர்ப்பத்தைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவேண்டியதன் அவசியத்தை சில தினங்களுக்கு முன் வெள்ளவத்தையிலிருந்து திரு. எம். எஸ். கந்தையா எழுதியிருந்ததை 'ஈழநாடு' வாசக அன்பர்கள் மறந்திருக்கமாட்டார்கள்.

''கல்வி முன்னேற்றத்தினுல் அரசாங்கத்திலும் மற்றும் பல துறைகளிலும் பதவி வகித்துச்சீருடனும், சுய மரியாதையுடனும் வாழ்ந்துவந்த காலம் மறைந்து வருகிறது. 'தன் கையே தனக்குதவி' என்ற முதுமொழிக்கிணங்கப் புது வழிகளைக் கைக்கொண்டு, முன்னெருபோதும் இல்லாத வகையில் கமத்தொழிலிலும் கைத்தொழிலிலும் ஈடுபட வேண்டும்'' என்று அவர் அதில் தெரிவித்திருந்தார். சில ஆலோசனைகளையும் அவர் கூறியிருந்தார்.

முதற்படியாக பட்டணங்களுக்கும், கிராமங்களுக்கும் அப்பால் பொருத்தமான இடங்களில் அரசாங்கத்திடம் காணிபெற்று வசதியான வீடுகள் அமைத்து அவற்றில் குடியேறி புதிய கிராமத்தை உண்டாக்க முடியுமென்றும் பெருமளவில் உணவுற்பத்தி செய்யலாமென்றும் இத் திட்டத்திலுள்ளோர் எல்லோரும் சேர்ந்து சங்கம் அமைத்துச் சிறப்பாக ஒப்பேற்றலாமென்பதும் திரு. எம். எஸ். கந்தையாவின் யோசனை.

தமிழ்மக்களைக் குறிப்பாக யாழ்ப்பாணப் பகுதி மக்களைப் பொறுத்தவரையில் குடியேற்றத் திட்டங்களில் குடியேறுவதில் அக்கறையும் ஆர்வமும் வெகுகுறைவு. சிங்கள மக்களுக்குக் காணி கிடைத்ததுமே குடும்பமாகச் சென்று குடியேறி காணியைத் திருத்தி உணவுற்பத்தியிலிறங்கி விடுகிறார்கள். தமிழ்மக்கள் குடியேற்றத்திட்டங்களில் குடியேறுவதற்குக் காட்டிய தயக்கமே வடக்கு, கிழக்கு மாகாணங்களில் சிலபகுதிகளை இழக்கநேர்ந்ததென்று சொல்லப்படுவதில் உண்மையில்லாமலில்லை.

குடியேற்றத்திட்டங்களில் காணிபெற்றவர்களில் பலர் மலையகத் தொழிலாளர்களைக் குடியமர்த்தி உணவுற்பத்திசெய்து அதில் பெறும் பணத்தைச் சேமித்துவெளிநாடுகளில் வேலைபார்க்கும் இளைஞர்களுக்குச் சீதனம் கொடுத்துத் தங்கள் பெண்களுக்கு மணம் செய்து கொடுக்கிறார்கள்.

இந்த மனப்பான்மை மாறவேண்டியது இனி அவசியமாகிவிட்டது.

குடியேற்றத்திட்டங்களில் குடியேறி புதிய கிராமங்களை அமைத்து உணவுற்பத்தியிலும் கால்நடை வளர்ப்பு, புதிய கைத்தொழில்களிலும் ஈடுபட வேண்டியது அவசியமாகும்.

புதிய கைத்தொழில்களில் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களும் ஈடுபடலாம். பொது ஸ்தாபனங்களும் இதில் அதிக பங்கெடுக்கலாம்.

தொழில் அதிபர்களும் உற்பத்திப் பொருள்களுக்கும் இவ்விடங்களிலுள்ள மூலப்பொருள்களுக்கு அமையக் கைத்தொழில் நிலையங்கள், ஆலைகள் முதலியவற்றைத் தொடக்கி அவ்வப் பகுதி மக்களுக்குத் தொழில் வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்க முன்வருவதும் பெரும் பயன் தரும்.

தமிழ்மக்களின் வருங்கால சுபீட்சத்தைக் கருத்தில் கொண்டு பொருளாதாரத்தைப்பெருக்குவதும் வேலைவாய்ப்பை ஏற்படுத்துவதும் தலையாய கடமையென்பதை இவர்கள் நினைவில் கொள்ளவேண்டும்.

நல்ல நோக்கத்துடன் விவசாய கைத்தொழில் சங்கம் ஒன்று சில தினங்களுக்குமுன் கொழும்பில் ஆரம்பிக்கப் பட்டிருக்கிறது. இதன் உதவியும்ஆலோசனைகளும் எதிர்காலத்தில் நல்ல பயன் தருமென்று எதிர்பார்ப்போம்.

# "தீண்டாமையை பூண்டோடு களைவதிலும் கூட்டணி தீவிரம் காட்டுகிறது"

## — எதிர்க்கட்சித்தலைவர் 'அமீர்'

[அரியாலை]

''தமிழர் விடுதலைக்கூட்டணி ஓர் அரசியல் கட்சியல்ல. அது ஒரு விடுதலை இயக்கமாகும். தமிழ்மக்களின் விடுதலையை மையமாக வைத்தே அது செயல்பட்டு வருகிறது. இவ் விடுதலை இயக்கத்திற்கு எதிர் இயக்கங்கள் தமிழ்மக்கள் மத்தியில் இல்லை. தமிழ்மக்களின் இனவிடுதலைப் போராட்டத்தில் இந்நாட்டில் வாழும் சகல தமிழ்மக்களும் எவ்வித வேறுபாடுமின்றி தோளோடு தோள் நின்று போராடுவது கடமையாகும். தமிழ்மக்களிடையே சமூகக் குறைபாடுகள் உண்டென்பதை நான் ஒத்துக்கொள்ளுகிறேன். அவற்றை அடியோடு அழிக்க எமது விடுதலைஇயக்கம் செயலாற்றிவருகிறது என்பதையும் சுட்டிக்காட்டுகிறேன். சமூகக்குறைபாடுகளால் பின்தள்ளப்படும் மக்களும் தமிழ்மக்கள்தான் என்பதையும், அவர்களும் எமது விடுதலை இயக்கத்தில் ஒன்றுபட்டுழைக்க முன்வரவேண்டுமென்றும் கேட்டுக்கொள்ளுகிறேன்''

இவ்வாறு எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபரும், காங்கேசன்துறைத் தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினருமான திரு. ஏ. அமிர்தலிங்கம் தன்னைப் பேட்டிகண்ட அகிலஇலங்கைத் திருவள்ளுவர் மகாசபைத் தூதுக்குழுவினரிடம் தெரிவித்தார்.

மகாசபைத் தலைவர் திரு. க. கிருஷ்ணராசா தலைமையில் பொதுச்செயலாளர் திரு. எஸ். தில்லைநாதன், நிர்வாகச் செயலாளர் திரு. எஸ். சொலமன், நிர்வாகசபை உறுப்பினர் திரு. எம். சிவதாசன் ஆகியோர் கலந்துகொண்டனர்.

மகஜர்

மகாசபையின் சார்பில் எதிர்க்கட்சித் தலைவரிடம் கையளிக்கப்பட்ட மகஜரில், எதிர்வரும் ஸ்தலஸ்தாபனத் தேர்தல்களில் வள்ளுவ சமூகத்தவர்கள் அங்கத்தவர்களாக வரவாய்ப்பு அளிக்கும்படியும் வள்ளுவசமூகத்தில் படித்து வேலைவாய்ப்பின்றியிருக்கும் வாலிபருக்கு விவசாயநிலம் வழங்க வேண்டுமென்றும், தேசியஅரசுப்பேரவை உறுப்பினர் மூலம் வழங்கப்படும் வேலைவாய்ப்புகளில் வள்ளுவ சமூக மக்களுக்கு விசேட சலுகை அளிக்கவேண்டுமென்றும், சர்வகலாசாலை அனுமதி பெறக்கூடியதாக கல்விகற்ற மாணவர்களுக்கு விசேட சலுகை பெற்றுத்தரவேண்டுமென்றும் இன்றும் வடமாகாணத்தில் திறந்துவிடப்படாமல் இருக்கும் சைவஆலயங்களையும், தேநீர்க்கடைகளையும் திறந்துவிட நடவடிக்கை எடுக்கும்படியும் கோரப்பட்டுள்ளது.

சமூகத்தில் தகுதியானவர்களை தேர்தல் தொகுதிகள் தோறும், சமாதான நீதிபதிகளாக நியமனஞ்செய்ய நடவடிக்கை எடுக்கும்படியும், நீண்டகாலமாக நமது சமூகத்து மக்கள் குடியிருக்கும் மடம்வீதி, திட்டி இராசசிங்கம் வீதிகளிலுள்ள காணிகளை சுவீகரித்து குடியிருப்பாளர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும், அரசாங்கம் வழங்கமுன்வரும் நியமனங்கள் பதவிஉயர்வுகள் என்பவற்றில் விகிதாசாரப்படி எம்மவருக்கு நியமனம் வழங்க நடவடிக்கை எடுக்கும்படியும் அம்மகஜரில் மேலும் கோரப்பட்டுள்ளது.

காங்கேசன்துறைத் தொகுதியிலுள்ள அவரது காரியாலயத்தில் வைத்து இத் தூதுக்குழுவினர் அவரைச் சந்தித்து பேச்சுவார்த்தை நடாத்தினர். [உ]

## எம். பியிடம் கோரிக்கை

[மட்டக்களப்பு]

மண்முனை மேற்கு பிரிவாள படுவான் கரையின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும்படி இத்தொகுதியின் ஆட்சிமன்றப் பிரதிநிதியை மேற்படி கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாசம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

மேற்படி பகுதியின் அபிவிருத்தித் திட்டங்கள் குறித்து ஆராய்ந்து ஆவன செய்யும்பொருட்டு மட்டக்களப்பு இரண்டாவது பிரதிநிதி ஜனாப் பரீட் மீராலெப்பை மகிளவட்டவான் கி. மு. சங்கத்தின் அழைப்பையேற்று இம்மாதம் 25-ந் திகதி அங்கு வருகை தரவிருப்பதாக பிரஸ்தாப சங்கச் செயலாளர் திரு. பூ. குணரத்தினம் தெரிவித்துள்ளார். [உ]

## ஆசிரியருக்குக் கடிதம்:

## ஐ. நா. சங்கவருடாந்தகூட்டம்

தேசிய மறுலர்ச்சிக்கு மனித உரிமைகள் மூலவேராக உள்ளன என்ற தலைப்பில் இம்மாதம் 6-ந் திகதி ஈழநாடு தமிழ்த் தினசரியில் வெளிவந்திருந்த அறிக்கையை வாசித்தேன். சங்கத்தின் வரலாற்றை அறிந்த யாராவது அதைவாசித்தால் கவலைப்படுவது நிச்சயம் சொல்லவேண்டிய முக்கியமான விடயங்கள் ஒன்றும் அங்கே சொல்லப்படவில்லை. சங்கத்தின் வருடாந்தக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது அங்கே நடைபெற்ற விஷயங்களில் திரு. யோகேந்திரா துரைசாமி அவர்கள் புதிய தலைவராக நியமிக்கப் பட்டதும் அவர் கூறியவைகள் மட்டுமா தமிழ் மக்கள் அறியவேண்டிய விடயங்கள்? பின்வரும் உண்மைகளையும் தங்களுடைய தினசரி மூலம் தமிழ்மக்கள் வாசிக்கும்படி செய்தல் இன்றியமையாததெனக் கூற விரும்புகின்றேன்.

இவ்வாண்டிலும் பொதுக் காரியதரிசியாக திரு. குமாரன் பெர்ணன்டோ மீண்டும் ஒருமுறை ஏகமனதாக நியமிக்கப்பட்டுள்ளார். சங்கத்தின் முன்னேற்றத்துக்காக இரவும் பகலும் அவர் செய்த அயராத தொண்டுகளே அதற்குக் காரணம்.

பொதுக்காரியதரிசியாக அவர் பொறுப்பேற்கும் பொழுது சங்கத்தின் வங்கிக் கணக்கில் ரூபா 86/- மட்டுமே இருந்தது. செலுத்த வேண்டிய பணத்தைக் கொடுக்காத காரணத்தினுல் சமஷ்டிச் சங்கத்தின் தொடர்பும் இடை நிறுத்தப்பட்டிருந்தது. இன்று சமஷ்டியின் தொடர்பும் பெற்று வங்கியில் ஐந்தொகையாக ரூபா 2148-09 இருக்கிறது.

புது வருஷத்தில் தலைவராகத் தகுதியும் உரிமையும் உள்ள தமிழராகிய யோகேந்திரா துரைசாமி அவர்களை நியமிக்கவேண்டுமென ஒழுங்கு செய்தவரும் பொதுச்செயலாளர் குமாரன் பெர்ணன்டோ அவர்களே என்பது குறிப்பிடத்தக்கது.

தூதுக்கோஷ்டி ஒன்றுடன் மாட்சிமைதங்கிய ஜனதிபதி வில்லியம் கோபல்லாவ அவர்களைச் சந்தித்த பொதுக் காரியதரிசி விடுத்துள்ள இரண்டு வேண்டுகோள்களில் முதலாவது வேண்டுகோளின் பயனாக அவர் ஆயுட்கால அங்கத்தவராகிவிட்டார் என்ற உண்மை அச்சமயத்தில் பக்கத்தில் இருந்த எனக்கு நன்றாகத் தெரியவந்தது.

வருடாந்தப் பொதுக்கூட்ட அறிக்கையும், வரவு-செலவுக் கணக்கும், ஐந்தொகையும், கூட்டத்துக்கு அழைப்பிதழும் முதன்முதலாக இம்முறை தமிழ், சிங்களம் ஆகிய இரு மொழிகளிலும் வெளியிடப்பட்டன. சாதாரண பொது மக்களுக்கும் இச்சங்கத்தில் இடம் கொடுப்பதற்கு ஒழுங்கு செய்தவரும் அவரே.

வருடாந்தக் கூட்டத்தில் முக்கியமாக மூன்று பேச்சுக்கள் நடைபெற்றன. முதற் சொற்பொழிவை திரு. நிஹால் ஜயவிக்கிரம செய்தார். மற்றொன்று பொதுக் காரியதரிசி குமாரன் பெர்ணன்டோ அவர்களுடையது. கடைசிப் பேச்சைப் புதிய தலைவராக நியமிக்கப்பட்ட திரு. யோகேந்திரா துரைசாமி அவர்கள் செய்தார். சிங்களவர் இருவர் கூறிய ஒன்றுக்கும் மதிப்பளிக்காது, ஒரு தமிழருடைய பேச்சுக்குமட்டும் முக்கியத்துவம் கொடுத்த வாசகர்களுடைய மனத்தில் பிழையான கருத்துக்களை ஏற்படுத்துவதற்கு இடம்தரலாமென உணர்கிறேன்.

ஸ்ரீலங்கா ஐக்கியநாடு சங்கமே திரு. குமாரன் பெர்ணன்டோ என்ற அளவுக்கு அவருடைய நேரம், உடல், பொருள் ஆகியவற்றையெல்லாம் செலவுசெய்து அருமையான சேவை செய்துவருகின்ற அவரைப்பற்றி ஒரு சொல்லேனும் குறிப்பிட்ட அறிக்கையில் ஏன் வரவில்லை?

இன, மத, மொழி பேதம் பாராது உலக சமாதானம், ஒற்றுமை, சகோதரத்துவம், சம உரிமைபோன்ற நற்குணங்களை விருத்திசெய்துவரும், சங்கமொன்றில் இப்படிப்பட்ட செயல் மீண்டும் நடைபெறாமல் இருப்பதற்கு நடவடிக்கைகள் எடுத்தால் நல்லது.—வணக்கம்

நடுவர்

### மணிவாக்கு

சோம்பல் துன்பத்தை விளைவிக்குமாயின், யாம் சோம்பேறிகளாயிருக்க மாட்டோம். அதேபோல் அசுத்தமும் துன்பத்துக் கேதுவாயிருப்பின் யாம் அசுத்தமாயிருக்க மாட்டோம்.

— மகாத்மாகாந்தி.

## ஐயாறன் எழுதுவது

'ஈழநாடு' பத்திரிகையில் சிறுகதை, தொடர்கதை, நாடகம், கவிதை முதலிய போட்டிகளை நடத்தினேம். காரியாலயத்தில் பரிசளிப்பு விழா நடைபெற்றது.

ரசிகமணி கதைகளையெல்லாம் படித்து, பரிசிலனை செய்து, பரிசுக்குரிய கதைகளைத் தெரிவு செய்தார். பரிசளிப்புவிழா கூட்டத்தில் கலந்துகொண்ட எனக்கு கதைகளைப்பற்றி ஒன்றும் தெரியாது என்று ரசிகமணி ஓர் உண்மையைத் தயக்கமின்றி கூறினார்.

அந்த உண்மையைக் கேட்க சற்று கசப்பாக இருந்தது. என்றாலும் அவருக்குப் பதில் கூற வேண்டிய அவசியத்தை உணர்ந்தேன்.

'ரசிகமணி அவர்கள் ஒரு கசப்பான உண்மையை துணிச்சலுடன் கூறினார்கள ஈழத்து இலக்கியத்தைக் கரைத்துக் குடித்துள்ள ரசிகமணி அவர்கள் எங்களுக்குக் கிடைத்துள்ள போது, 'ஈழநாடு'க்கு எவ்வித குறையுமில்லை. (எங்கள் துரதிருஷ்டம் அப்பெரியார் இப்போது மறைந்துவிட்டார்).

கதைகளைப்பற்றிமட்டுமல்ல, தமிழைப்பற்றியும், வேறு எதைக் குறித்தும் எனக்கு ஒன்றும் தெரியாது என்பது உண்மை. ஆனல் இதில் ஒரு விஷயம் எனக்குப் புரியவில்லை. தமிழகத்தில் பல பத்திரிகைகளில் பத்து ஆண்டுகளும், கொழும்பு 'வீரகேசரி'யில் 20 ஆண்டுகளும், யாழ்ப்பாணத்தில் 'ஈழநாட்டில்' 20 ஆண்டுகளும் பத்திரிகாசிரியராக எப்படி இருக்க முடிந்தது? ஒன்றும் தெரியாத ஒருவனை எப்படி தமிழ்ப்பெருமக்கள், பொறுத்துவந்தார்கள்? எப்படி ஐம்பது வருட காலமாக தமிழே தெரியாத ஒருவன் தமிழ்ப் பத்திரிகை உலகத்தில் இருக்க முடிந்தது?

இதை நினைத்துப் பார்க்கும்போது, ஒரேயொரு உண்மைதான் எனக்குப் புலப்படுகிறது. அவனன்றி ஓர் அணுவும் அசையாது. எல்லாம் அவன் செயல் எனும் பெரியோர் அனுபவ வாக்குத்தான் நினைப்புவருகிறது.

இறை அருள் இருப்பின் ஊமையும்கூட சண்டப்பிரசண்டனுவானும். முடவன்கூட மலைகளைத் தாண்டுவானும். தமிழறிவே சிறிதும் இல்லாத ஒருவன் சுமார் அரை நூற்றுண்டுகாலம் தமிழ்ப் பத்திரிகை உலகில் வாழ முடியுமாயின், இறைவன் கருணைக்கும், திருவருளுக்கும் வேறு அத்தாட்சி என்னவேண்டும்?

எனது குறைகுற்றங்கள் பல உண்டு. அவற்றை எல்லாம் பொருட்படுத்தாது, பெரிய மனதுவைத்து, என்னையும் ஏற்றுக்கொண்டுவந்துள்ள தமிழன்பர்களுக்கு எனது நன்றியை எப்படித் தெரிவித்துக்கொள்வேன்!

ஈழத் தமிழகத்தின் துன்பங்கள் எல்லாம் தீர்ந்து, தமிழ் கூறும் நல்லுலகம் மேன்மேலும் புகழுடனும் சிறப்புடனும் தலைநிமிர்ந்து வாழ எல்லாம் வல்ல இறைவன் அருள் செய்ய மனமார பிரார்த்திக்கிறேன்.

0 0 0

எல்லா உலகமும் ஆனாய் நீயே
ஏகம்பமேவி இருந்தாய் நீயே
நல்லாரை நன்மை அறிவாய் நீயே
ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் நீயே
பொல்லா வினைகள் அறுப்பாய் நீயே
புகழ்ச்சேவடி என்மேல் வைத்தாய் நீயே
செல்வாய செல்வம் தருவாய் நீயே
திருவையாறகலாத செம்பொற் சோதி!

—அப்பர் சுவாமிகள்.

### அரபு அதிகாரி சுட்டுக்கொலை

# ஆயுதம் தாங்கிய இரு கமாண்டோக்களும் சரண்

## பணயக் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர்

நிக்கோஸியா, பெப். 20

ஆபிரிக்க — ஆசிய மக்கள் நட்புறவுச் சங்கத்தின் செயலாளர் ஜனுப் யூசுப் சிபாசைச் சுட்டுக் கொண்ட அரபு கமாண்டோக்களுக்களுக்கு எகிப்தியகமாண்டோ படையினருக்கு மிடையில் சைப்பிரஸ்-லானர்கா விமான நிலையத்தில் நடைபெற்ற கடும் சண்டையை அடுத்து ஆயுதம் தாங்கிய இரு கமாண்டோக்களும் படையினரிடம் சரணடைந்தனர்

கமாண்டோக்கள் வசமிருந்த பணயக் கைதிகளும் விடுவிக்கப்பட்டனர் என்றும் அறிவிக்கப்பட்டது.

நிக்கோஸிய ஹில்டன் ஹோட்டலில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் கலந்து கொண்ட ஜனுப் சிபாய் மேடைக்குச் செல்லும்போதே சுட்டுக்கொல்லப்பட்டார்.

மகாநாட்டு மண்டபத்தினுள் புகுந்த அரபுமொழிபேசும் இரு ஆயுதம் தாங்கிய கமாண்டோக்கள் ஜனுப் சிபாயைச் சுட்டுக்கொன்ற பின்னர் அங்கிருந்த மகாநாட்டுப் பிரதிநிதிகளில் 11 அரபுக்களை பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்துக் கொண்டு பஸ்ஸில் விமானநிலையம் சென்று அங்கிருந்து விமானத்தில் வெளியேறி பல இடங்களுக்கும் அலைந்துவிட்டு மீண்டும் சைப்பிரஸ் திரும்பியிருந்தனர்.

**ஜனுப் அஸீஸ் பணயக் கைதி!**

இம் மகாநாட்டில் கலந்து கொண்ட இலங்கைப் பிரதிநிதி ஜனுப் ஏ. அஸீஸ் சிறிது நேரம் பணயக்கைதியாக வைக்கப்பட்டார் என்பதும் அரபு இனத்தைச் சேராதவராகையால் அவர் பின்னர் விடுவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [இ]

### மலேஷியப் பிரதமரை ஆஸியில்

# கடத்திச் செல்ல முயற்சி

## அவசரமாக நாடுதிரும்பினர்

சிட்னி, பெப். 20

மலேஷியப் பிரதமர் ஜனுப் ஹுசேனை ஆஸ்திரேலியாவில் வைத்துக் கடத்திச் செல்ல முயற்சி மேற்கொள்ளப்படுவதாகக்கிடைத்த தகவலை அடுத்து அவர்தமது ஆஸ்திரேலிய விஜயத்தை விரைவில் முடித்துக்கொண்டுமலேஷியா திரும்பியுள்ளார்.

ஆஸ்ரேலியாவில் வைத்து ஜனுப் ஹுசேனைக் கடத்த முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகக் ஆஸ்திரேலியப் பொலிசாருக்கு கிடைத்த இரகசியத் தகவலை அடுத்து பாதுகாப்புக் கருதி பொலிசார் கேட்டுக்கொண்டதைஅடுத்தே அவர் நாடு திரும்பினர்.

ஜனுப் ஹுசேனைக் கடத்திச் செல்ல முயன்றவர்கள் மலேஷியாவிலிருந்தே ஆஸ்திரேலியாவுக்கு வந்திருந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ)

## "எமது பண்பாடு அறிந்து அமெரிக்கர் வியப்பு"

[அரியாலை]

"அமெரிக்க நாட்டில்வாழும் ஆண்களும் பெண்களும் தனிச் சுதந்திரத்துடன் வாழ்வதால் அங்கு விவாகரத்துகள் மிகவும் அதிகமாக இருப்பதைக் காண முடிகிறது. எம் நாட்டில் திருமணப் பேச்சுக்கள் மூலம் விவாகங்கள் நடைபெறுகின்றன என்றும் கைப்பிடித்த மனைவியுடன் காலம்முழுவதும் வாழ்கிறோம் என்றும் நான் கூறிய பொழுது அவர்கள் மிகவும் ஆச்சரியப் படுகிறார்கள்"

இவ்வாறு கைதடி குருடர் செவிடர் பாடசாலை அதிபர் திரு. டேவிட் ஜெயசிங்கம் யாழ்ப்பாணம் பரியோவான் கல்லூரியில் "ஐக்கிய அமெரிக்காவில் என்னைக் கவர்ந்த அனுபவங்கள்" என்ற விடயம் குறித்து பேசுகையில் குறிப்பிட்டார்.

பீற்றோ மெமோரியல் மண்டபத்தில் அதிபர் திரு. சி. ஈ. ஆனந்தராஜா தலைமையில் திரு. டேவிட் தொடர்ந்து பேசுகையில்; அமெரிக்க மக்கள் நேரத்தை மிகவும் முக்கியமானதாகக் கருதுகிறார்கள். அந்நாட்டில் மிகவும் நீண்ட தூரத்தை குறுகியநேரத்தில் போய்ச்சேரக்கூடியதான போக்குவரத்துவசதிகள் அங்குண்டு. அந்த நாட்டைப் பொறுத்தவரையில் கட்டிடங்கள் வீதிப்போக்குவரத்து- தனிமனித சுதந்திரம், உணவு வகைகள் என்பவை ஏனைய நாடுகளைவிட மிகவும் முன்னேற்றமாகக் காணப்படுகின்றன.

"அமெரிக்காவிலுள்ள குருசெவிடர் பாடசாலையில் பயிற்சிபெற்ற எனக்கு அமெரிக்க வெள்ளைமாளிகையில் ஜனாதிபதியின் பாரியாரான திருமதி கார்ட்டரையும் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. அமெரிக்க நாட்டில் இனப்பாகுபாடு சிறிதளவு இருந்தாலும், என்னைப் போன்றவர்கள் அங்கு நன்குமதிக்கப்படுவதைக் காணக்கூடியதாக இருந்தது, அமெரிக்க மக்கள் ஒருநிமிடத்தையும் வீணாகச் செலவிட மாட்டார்கள். இதனால்தான் அந்நாட்டு மக்கள் நாளாந்தம் முன்னேறிக்கொண்டு வருகிறார்கள்" என்று குறிப்பிட்டார். [உ]

## பொதுவாழ்விலிருந்து ஒதுங்கிவிட ஜெ. பி. முடிவு

பட்னா, பெப். 20

இந்திய சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயண் தாம் பொதுப் பணிகளிலிருந்து விலகிவிடத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவித்தார்.

75 வயதான இவர் பட்னாவில் நேற்று பத்திரிகைகளுக்கு விடுத்த அறிசகையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமது உடல்நிலை குறித்தே தாம் இந்த முடிவுக்கு வந்துள்ளதாகவும் தமது இந்த முடிவை மாற்றுமாறு வற்புறுத்தவேண்டாம் என்றும் அவர் தமது நண்பர்களைக் கோரியுள்ளார்.

பொது ஸ்தாபனங்களுடனும் நிறுவனங்களுடனும் தமக்குள்ள சகல தொடர்புகளையும் துண்டிக்கத் தீர்மானித்துள்ளதாகவும் நாட்டு நன்மை கருதி தமது ஆலோசனை சகலருக்கும் கிடைக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். [இ]

[யாழ்ப்பாணம்]

நல்லூர்த் தொகுதியில் வாழும் தமது மனைவிக்கு இம் மாதம் முதலாம் திகதி அனுப்பிய தந்தி மணி ஓடர் 10ம் திகதிதான் விலாசதாரருக்கு வந்து கிடைத்ததாம்.

அவசரமாக அனுப்பிவைக்கப்பட்ட இந்தப் பணம் உரிய காலத்தில் தம் மனைவிக்குக் கிடைக்காமையால் தமக்குப் பெரும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்டிருப்பதாக அவர் எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்துக்கு புகார் செய்துள்ளார்.

இதுபற்றி நாடாளுமன்றத்தில் தபால் அமைச்சரிடம் எடுத்துரைக்கும்படியும் அவர் கோரியுள்ளார்.

### மத்துகாமத்திலிருந்து நல்லூருக்கு

# தந்தி மணிஓடரின் நத்தைவேகம்?

## அமிருக்குப் புகார்

நல்லூர்த் தொகுதியைச் சேர்ந்த மு. திருநாவுக்கரசு என்பவரே இந்தப் புகாரைத் தெரிவித்துள்ளார். மத்துகாமத்தில் அம்பா தென்ன அரச பெருந் தோட்டத்தில் அவர் தொழில் புரிகின்றார்.

நல்லூரிலுள்ள தமது மனைவிக்கு இம்மாதம் முதலாம் திகதி 350 ரூபாவுக்கு தந்தி மணி ஓடர் ஒன்றை மத்துகாமம் தபால் கந்தோரிலிருந்து அனுப்பியதாகவும் ஆனால் 10ம் திகதியே அது மனைவிக்குக் கிடைத்ததாகக் கூறியுள்ள அவர், மத்துகாமம் தபால் கந்தோரில் கவுண்டரில் இருந்த குமாஸ்தா தம்மை உதாசீனமாக நடத்திய துபற்றியும் திரு. அமிர்தலிங்கத்துக்கு எடுத்துக் கூறியுள்ளார்.

### வல்லரசு ஒன்றின்

# நெருக்குதலுக்கு இந்தியா அடிபணிகிறதா?

## இந்திராவின் கூற்றுக்கு மறுப்பு

புதுடில்லி, பெப். 20

வல்லரசு ஒன்றின் நெருக்குதலுக்கு இந்திய அரசு அடிபணிந்து வருகிறது என்று முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி சுமத்தியுள்ள குற்றச்சாட்டை இந்திய வெளிநாட்டமைச்சர் திரு. வாஜ்பாய் மறுத்துள்ளார்.

திருமதி காந்தியின் குற்றச்சாட்டுக்கள் அபத்தமானது, ஆதாரமில்லாதது என்றும் தெரிவித்த திரு. வாஜ்பாய், வல்லரசுகள் உட்பட சகல நாடுகளுடனும் இந்தியா ஒரே மாதிரியான நல்லுறவையே பேண விரும்புகிறது என்றும் கூறினார். [இ]

## "எம் மத்தியில் ஏற்றத் தாழ்வு இருக்கக் கூடாது"

### நல்லூர் எம். பி. பேச்சு

[அரியாலை]

"தமிழர் விடுதலைக்கூட்டணி இந்நாட்டில் வாழும் தமிழர்கள் ஒதுக்கப்பட்ட இனமாகவும், உரிமைகள் மறுக்கப்பட்ட இனமாகவும் தொடர்ந்தும் வாழமுடியாது என்று உரிமைகள் கோரி நிற்கிறது அதே நேரத்தில் எம்மத்தியில்வாழும் எம்இனத்தின் ஒரு பகுதியினர் உரிமைகள் மறுக்கப்பட்டவர்களாக வாழக்கூடாது. அவர்களுடைய சகல உரிமைகளும் வழங்கப்பட்டால்தான் நாம் இந்நாட்டில் பூரண சுதந்திரமுள்ள இனமாகவாழ முடியும். இதற்கான சகல முயற்சிகளையும் கொள்கையளவில் மட்டுமல்ல செயல் முறையிலும் தமிழர் விடுதலைக்கூட்டணி செயல்படுத்திவருகிறது."

இவ்வாறு நல்லூர்த்தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. எம். சிவசிதம்பரம் கோண்டாவில் கிழக்கு ஸ்ரீநாராயண கிராம அபிவிருத்திச்சங்க சனசமூக நிலையத்தின் வெள்ளிவிழாவின் இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சனசமூகநிலையத்தலைவர் திரு. க. கிருஷ்ணராசா தலைமையில் நடைபெற்ற மேற்படி வெள்ளி விழா வைபவத்தில் திரு. சிவசிதம்பரம் தொடர்ந்து பேசுகையில்,

"உடுப்பிட்டித் தொகுதியில் சிறுபான்மைத் தமிழர் சமூகத்தைச் சேர்ந்த திரு இராசலிங்கத்தைத் தமிழர் விடுதலைக் கூட்டணி அபேட்சகராக நிறுத்தி பெரும் வெற்றியை ஈட்டியது. இதன்மூலம் வடபகுதியில் நிலவும் தீண்டாமையை நாம் முற்றாகவே ஒழிக்க நடவடிக்கை எடுத்து வருகிறோம் சிறுபான்மைத் தமிழ்மக்கள், தமிழ் மக்களின் பொதுப்பிரச்சனையில் அக்கறையில்லாமல் இதுவரை இருந்து வந்திருக்கிறார்கள் என்பதை நாம் ஓரளவு அறிவோம்.

"இந்நாட்டில் வாழும் தமிழ் இனம பூரணமான உரிமை கொண்ட இனமாக வாழ்ந்தால்தான் தமிழ் மக்களிடையே வாழும் உரிமை குறைந்த மக்களும் பூரண உரிமைகளைப் பெறமுடியும்.

[6-ம் பக்கம் பார்க்க]

## குப்பிவிளக்கு குழந்தைக்கு

# எமனானது!

[மட்டக்களப்பு]

இளம் தம்பதிகள் நித்திரையில் ஆழ்ந்திருந்த சமயம் குப்பி விளக்கு தட்டுப்பட்டதனால் அவர்களின் மூன்று மாதக் குழந்தை தீக்குப் பலியானது.

இச்சோக சம்பவம் பொத்துவில் இரண்டாம் குறிச்சியில் நடைபெற்றது. மேற்படி தீ விபத்து குறித்து மட்டக்களப்பு நகர சடுதி மரண விசாரணை அதிகாரி திரு. த. சிவநாதன் விசாரணை நடத்தினர். அப்பொழுது தெரியவந்ததாவது!

சம்பவ தினம் தீ விபத்துக்குள்ளான பெண் குழந்தையான நஸீமாவை நித்திரையான பின் தந்தையான ஆதம்லெப்பையும், அவரது மனைவியும் குப்பி விளக்கை தலைமாட்டில் வைத்து அதை அணைக்காமலேயே இருவரும் கண்ணயர்ந்து விட்டார்களாம்.

குழந்தை நடு இரவில் கண் விழித்து கைகால் அசைத்த சமயம் தலைமாட்டிலிருந்து குப்பிவிளக்கு தட்டுப்பட்டு எண்ணெய் பரவியதனால் குழந்தைக்குத்தீப்பற்றியதாம். தீச்சுவாலை அதிகமானதால் கண்விழித்த பெற்றோர் அக்குழந்தையை அங்கிருந்து மட்டக்களப்பு பெரியாஸ்பத்திரியில் தீக்காயங்களுடன் அனுமதித்தனராம் மறுநாட் காலை அக்குழந்தை மரணமானது. [உ]

அராலி

## வித்தியாசாலைக்கு விளையாட்டு மைதானம்

(அராலி)

அராலி தென்மேற்கு முருகமூர்த்தி வித்தியாசாலைக்கு விளையாட்டு மைதானம் ஒன்று அமைத்துத் தருவதாக வட்டுக்கோட்டை எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு உறுதி மொழி வழங்கியுள்ளார்.

மேற்படி வித்தியாசாலையின் வருடாந்த விளையாட்டுப் போட்டியில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையிலேயே எம். பி. இவ் உறுதி மொழியை வழங்கினர்.

பாண்டியன் இல்லம் முதலிடத்தைப் பெற்றது.

திருமதி கலைமகள் திருநாவுக்கரசு போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசில்களை வழங்கினர். (உ)

RIO Daily 4 Shows
(Jaffna) Richard Harrison
in
Killers Are
Challenged

நாகம்ஸ்
[சுன்னகம்]
தினசரி 6-45, 10-00
ஜெய்சங்கர்
நடித்த
துணிவே துணை

Regal Jaffna Daily 4-45, 7-00 & 9-30 p.m.
Crazy Girls and the Funny Boy
From: 23-2-78
Jean Tierre Leaue in
GIRL IS A GUN
Color Action

இன்று மட்டும்
சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
K. பாலச்சந்தரின்
எதிரொலி (புத்தம் புதிய பிரதி)
சனி, ஞாயிறு (25, 26-2-78) காலை 8-30 மணிக்கு மட்டும்
BLACK MOUNTAIN

50-வது வெற்றி நாளை நோக்கி
ராணி வி. பி. கணேஷன் — சுபாகஷினி
ராம்தாஸ் — ஜெனிட்டா
(யாழ். நகர்) தினசரி 4 காட்சிகள் நடித்த
நான் உங்கள் தோழன்
26- திகதி சகல காட்சிகளிலும் நான் உங்கள் தோழன், கலைஞர்கள் மேடையில் தோன்றுவார்கள்

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
ஏ. வி. எம். ராஜன், ஜெயலலிதா, நாகேஸ.
அனாதை ஆனந்தன் (கலர்— புதியபிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள்
(யாழ்ப்பாணம்)
அநேகரின் வேண்டுகோளுக்கிணங்க 23-2-78 வரை நீடிக்கப்பட்டுள்ளது
இன்ஸ்பெக்டர் மனைவி
24-2-78 முதல் ஜெமினி, பத்மினி, ராதா நடித்த சித்தி

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன் ரஜனிகாந்த்
எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்: கே. பாலசந்தர்

ராஜா தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
[யாழ்ப்பாணம்]
ஜெய்சங்கர்-கே. ஆர். விஜயா-சோ-விஜயகுமார் நடித்த
மேயர் மீனாட்சி

இரு தினங்கள் மட்டும்
வெலிங்டன் தினசரி 4 காட்சிகள்
கல்யாணகுமார், தேவிகா நடித்த
நெஞ்சம் மறப்பதில்லை
[புதிய பிரதி]

கோட்டகை நிறைந்த காட்சியுடன் நடைபெறுகிறது
லிடோ போன் 7693
(யாழ் நகர்) முத்துராமன், சிவகுமார், சுஜாதா நடித்த
உறவு சொல்ல ஒருவன்

# 'ஆசிரியர் இடமாற்றம் மாணவரையும் பாதிக்கிறது'

[அரியாலை]

''தமிழ்மக்கள் சுபீட்சமான எதிர்காலத்தை உடையவர்களாக வேண்டுமானல் அவர்களுடைய சிறுர்கள் கல்வியில் போதிய கவனஞ்செலுத்த வேண்டும். தமிழ் மக்கள் கல்வியில் போதிய முன்னேற்றம் பெறவேண்டும். ஆசிரியர்களை கல்விப்பகுதியினர் திடீர் திடீர் என்று மாற்றுவதினல் சேவையிலிருக்கும் ஆசிரியர்கள் மட்டுமல்ல, அவர்களினல் கல்வி போதிக்கப்படும் மாணவர்களும் பாதிப்படைகிருர்கள்''

இவ்வாறு யாழ்ப்பாணம் நல்லூர் தெற்கு ஸ்ரீவிக்கினேஸ்வரர் வித்தியாலயத்தில் புதிய வகுப்பறை மண்டபத்தைத் திறந்துவைத்த யாழ்ப்பாணத்தொகுதி தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு. வெ யோகேஸ்வரன் பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் திரு. த. துரைச்சாமி தலைமையில் நடைபெற்ற விழாவில் திரு. யோகேஸ்வரன் தொடர்ந்து பேசுகையில், வாக்காளர்கள் என்மேல் கொண்ட நம்பிக்கைக்கும் கட்சிமேல்கொண்ட பற்றுக்கும் ஏற்ப நான் விசுவாசமாக நடப்பேன். பாடசாலைகளின் தேவைகளை நிறைவேற்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்டத்தின் மூலம் கிடைக்கும் பணத்தை செலவிடுவேன். இப்பாடசாலையின் முக்கிய தேவையாக இருக்கும் விளையாட்டு மைதானத்தை கூடிய விரைவில் பெற்றுத்தர முயற்சி செய்வதுடன், பாடசாலையின் விஸ்தரிப்புக்கு வேண்டிய சகல விடயங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்றுர்.

கல்லூரி அதிபர் திரு. த. துரைச்சாமி பேசுகையில், எமது பாடசாலை சிறிய பாடசாலையாக இருந்தாலும், இப்பகுதியிலுள்ள மற்றப் பாடசாலைகளைவிட கல்வியில் மிகவும் முன்னேற்றம்பெற்று வருகிறது. எமது பாடசாலையின் வளர்ச்சியில் பெற்றேர் கூடிய கவனம் செலுத்தவேண்டும் என்று குறிப்பிட்டார். [உ]

## பத்துரூபா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த தங்கப்பன், செல்லையா என்ற இரு சந்தேகநபர்களும் யாழ். பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

வீரபுத்திரன் பொலிசாருக்கு அளித்துள்ள வாக்குமூலத்தில் பொன்னன் துரையன் என்பவரும் சந்தேகநபர்களுடன் தமது தந்தை இன்னப்பொடியை வெட்டியதாகக் கூறியுள்ளாராம்.

இச்சந்தேகநபர் தலைமறைவாகிவிட்டதாகக் கூறப்படுகிறது. நடேசன் என்பவரின் நிலை அபாயகரமானதாகஇருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. மல்லாகம் நீதிபதி ஸ்தல விசாரணை நடத்தவுள்ளார். [உ]

## நியமனம்

[மாவிட்டபுரம்]

காங்கேசன்துறைப் பொலிஸ் நிலையத்தில் குற்றத்தடுப்புப் பிரிவு சப்இன்ஸ்பெக்டராகக் கடமையாற்றிய திரு. ஆரியரத்தின பிரதமமந்திரியின் மெய்ப்பாதுகாவலர்களில் ஒருவராக நியமனம்பெற்று கொழும்புக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

## வெற்றி தோல்வி இல்லை

[அரியாலை]

யாழ்ப்பாணம் பரி. யோவான் கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்கும், தெல்லிப்பளை மகாஜன கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டிக்குமிடையில் நடைபெற்ற கிரிக்கட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலாவது முறையாகத் துடுப்பெடுத்தாடிய பரி. யோவான் கல்லூரி 9 விக்கட்டுகளையும் இழந்து 285 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தை நிறுத்திக்கொண்டது.

மகாஜன கல்லூரி முதலாவது ஆட்டத்தில் சகல விக்கட்டுகளையும் இழந்து 119 ஓட்டங்களையும், இரண்டாவது ஆட்டத்தில் 6 விக்கட்டுகளை இழந்து 79 ஓட்டங்களையும் பெற்றது.

பரி. யோவான் கல்லூரிக் கோஷ்டியில் துடுப்பெடுத்தாடிய சோமசுந்தரம் ஆட்டத்தை இழக்காமல் 102 ஓட்டங்களைப் பெற்றுர். மகாஜன கல்லூரியைச் சேர்ந்த ஜெயந்தன் 47 ஓட்டங்களைப் பெற்றுர்.

பரி. யோவான் கல்லூரிக் கிரிக்கட் கோஷ்டி தலைவர் பௌஷான் 11 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும், கருணகுமார் 14 ஓட்டங்களைக் கொடுத்து 3 விக்கட்டுகளையும் பெற்றனர். போதிய நேரம் இன்மையால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. (இ)

## எம் மத்தியில்..

[4ம் பக்கத் தொடர்ச்சி]

தமிழ் மக்களின் விடுதலை இயக்கத்திற்கு பூரணமான ஒத்துழைப்பு நல்கவேண்டியது எல்லோரதும் கடமையாகும். இக்கிராமத்தின் முக்கியதேவையாக இருக்கும் மின்சாரத்தை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி உரிய அமைச்சுடன் பேச்சுவார்த்தை செய்ததுடன் அதற்கான நிதியையும் ஒதுக்கீடு செய்துள்ளேன்'' என்றுர். (உ)

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00, 9-30,
Mistress Famela

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 6-30, 9-30
சனி, ஞாயிறு: 2-30,
சிவாஜி — பத்மபிரியா
வைரநெஞ்சம்

# அயல் கிராமத்துக் கடிதம் ஐந்து நாள் பயணம்!

[சங்கானை]

பண்ணகத்தில் இருந்து அயல் கிராமமான சங்கானைக்கு அனுப்பிய ஒரு கடிதம் ஐந்து நாட்கள் கழித்தே குறித்த முகவரிக்கு போய் கிட்டியது.

இம் மாதம் 10-ம் திகதி எதிர்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம், வட்டு எம். பி. திரு. தா. திருநாவுக்கரசு ஆகியோர் கலந்து கொள்ளுமாறு சுமார் ஒன்றரை மைல் தூரத்திலுள்ள பத்திரிகை நிருபருக்கு இம் மாதம் 8ம் திகதி பண்ணகம் அண்ணகலை மன்றம் அனுப்பிய கடிதமே ஐந்துநாள் கழித்து 13ம் திகதி உரியவருக்கு வந்துசேர்ந்ததாம்.

இக் கடிதத்தில் 8ம் திகதி பண்ணகம் தபால்கந்தோரில் பொறிக்கப்பட்டிருந்தது. இந்த கடிதம் ஆமை வேகத்தில் நடாத்திய பயணம் பற்றி தபால்கந்தோரில் விசாரித்தபோது அவர்கள் தமக்குக் காரணம் தெரியவில்லையென கையை விரித்தார்களாம். [இ]

# 4,00,000 ருத்தல் தக்காளி கொள்முதல்

(மாவிட்டபுரம்)

தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், தனது எல்லைப்பரப்பிலுள்ள விவசாயிகளிடமிருந்து 4 லட்சம் ருத்தல் தக்காளிப்பழத்தை கொள்வனவுசெய்ய முன்வந்துள்ளது.

தக்காளிப்பழ 'சீசன்' ஆரம்பித்துள்ளதையடுத்து, விவசாயிகளிடமிருந்து ருத்தல் 50 சதம் வீதம் தக்காளிப் பழத்தைக் கொள்வனவுசெய்ய முன்வந்துள்ள மேற்படி சங்கம் கொள்வனவு செய்யும் தக்காளிப்பழத்தை விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வழங்கும்.

மேற்படிசங்கத்தினுல் கொள்வனவுசெய்வதென திட்டமிட்டுள்ள 4 லட்சம் ருத்தல் தக்காளிப்பழத்தில் 16 ஆயிரம் தக்காளிப்பழத்தை கொள்வனவுசெய்ய தற்போது சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளன. தொடர்ந்து மிகுதியை கொள்வனவுசெய்யவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதற்கான ஒழுங்குகளை சங்கத்தலைவர் திரு. கே. மகாதேவரவும், பொதுமுகாமையாளர் திரு. இ. நவரத்தினமும் செய்துள்ளனர்.

## வடக்கில் ஓடும் பஸ்கள் பற்றி...

[மட்டுவில்]

''சாதாரணமாக ஒரு இ. போ. ச. பஸ்ஸின் ஆயுட்காலம் பத்து வயதுதான். ஆனல் வடக்கில் இருபது வயதுக்கு மேற்பட்ட பல 'வயோதிப' பஸ்களும் ஓடுகின்றன.''

இவ்வாறு சாவகச்சேரியில் நடைபெற்ற இ. போ. ச. பஸ் சேவைக் கருத்தரங்கின்போது கோண்டாவில் இ. போ. ச. அத்தியட்சகர் திரு. என். தியாகராஜா கூறினர்.

''கடந்த 3ந் தேதி இரவு கடைசிச் சேவையாக யாழ்ப்பாணத்திலிருந்து, கனகன்புளியடி-கொடிகாமம் பஸ் வராமையால் பிரயாணிகள் கஷ்டப்பட்டனர். கடைசியில் இரவு 11-45க்கே கனகன்புளியடிக்கு பஸ் தரப்பட்டது'' என்று திரு. எஸ். அருளம்பலம் குறைப்பட்டுக் கொண்டதைத் தொடர்ந்தே அத்தியட்சகர் திரு. தியாகராஜா, வயோதிப பஸ் வண்டிகள் பற்றிக் குறிப்பிட்டார்.

''பஸ் வண்டிகளுக்கு வயது போய்விட்டதென்று 'ஓய்வு' கொடுத்தால் இங்கு சேவைக்கு பஸ்வண்டிகள் கிடையாது. அதற்கப்புறம் பிரயாணிகளின் பாவத்தை யார் பார்க்கிறது. இக்காரணத்தால்தான் வயோதிப பஸ்வண்டிகளை வைத்துச் சமாளிக்கிறேம்'' என்று திரு. தியாகராஜா விளக்கியபோது, சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் ''வயோதிப பஸ்வண்டிகள் காரணமாகவே, பிரயாணிகள் மழை பெய்தால் குடைபிடித்துக் கொண்டிருக்கவேண்டிய நிலையில் உள்ளது'' என்றுர்.

வியாபாரம் பெருக
விளம்பரம் செய்க

# இங்கு வரும் வெளிநாட்டவர் மீது தீவிர கண்காணிப்பு

## பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை

(கொழும்பு)

இலங்கைக்கு வரும் வெளிநாட்டவர்கள்பற்றிய சகலவிபரங்களையும் சேகரிக்குமாறும் அவர்களின் நடவடிக்கைகளைத் துல்லியமாக கண்காணிக்குமாறும் பொலிஸ் மா அதிபர் திரு. ஸ்டான்லி சேனநாயக்கா சகல பொலிஸ் நிலையங்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

வெளிநாடுகளிலிருந்து பெருந்தொகையாக வரும் ஹிப்பிகளின் நடவடிக்கைகளினால் எழும் பிரச்னைகள் பற்றி விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படியும் அவர் அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்படக்கூடிய எந்த ஒரு அவசரநிலையையும் சமாளிக்கக் கூடிய நிலையில் பொலிஸ்படை தயாராகஉள்ளது என்றும் திரு. சேனநாயக்கா தெரிவித்தார்.

## தீவுப்பகுதியில் சிரமதான மூலம் 50 குளங்களை ஆழமாக்க முடிவு

(வேலணை)

மனிதசக்தியைப் பயன்படுத்தி, தீவுப்பகுதி தெற்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள சுமார் 50 குளங்களை சிரமதான மூலம் ஆழமாக்க முடிவு செய்யப்பட்டுள்ளது

வேலணை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தில் திரு. மு. சுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற பன்முகப் படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்டத்தின் கீழ் கிராம அபிவிருத்தி சங்கங்களின் வேலைத் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு செய்யும்போதே மேற்கண்ட முடிவு செய்யப்பட்டது.

எழுபத்தி ஐயாயிரம்பேர் கொண்ட மனிதசக்திமூலம் குளங்களை ஆழமாக்கி, எதிர்காலத்தில் மழை நீரை குளங்களில் தேக்கி வைத்து, விவசாயத்தை விருத்தி செய்ய மேற்படிகூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

பன்முகப் படுத்தப்பட்ட வரவுசெலவுக் கூட்டத்தில், வேலணை உதவிஅரசாங்க அதிபர் பிரிவில் இருக்கும் கிராம அபிவிருத்திசங்கங்களின் தலைவர்கள், காரியதரிசிகள், ஊர்காவற்றுறைத் தொகுதி திட்டமிடல் அபிவிருத்திசபையைச் சேர்ந்த திரு. ரீ சிதம்பரநாதன், திரு. எஸ் நல்லையா. வேலணை நிறைவேற்றுப் பொறியியலாளர் அலுவலகத்தைச் சேர்ந்த உத்தியோகத்தர்கள், புங்குடுதீவு சர்வோதய அமைப்பாளர் திரு. க. திருநாவுக்கரசு, வேலணை மத்திய மகாவித்தியாலய அதிபர் திரு. குணபாலசிங்கம், உதவி அரசாங்க அதிபர் திரு. ஆ. செந்தில்வடிவேல் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

## வீட்டிலிருந்தவர்களைத்தாக்கி பெண்ணைக் கடத்தினராம்!

(வேலணை)

அறுவரைக் கொண்ட கோஷ்டியொன்று ஒருவீட்டிற்குள் புகுந்து, அங்கிருந்தவர்களைத் தாக்கிவிட்டு, வீட்டிலிருந்த ஒருபெண்ணைக் கடத்திச் சென்றுவிட்டதாம!

இச்சம்பவம் வேலணைமேற்கு செட்டில்என்றபகுதியில் இடம் பெற்றுள்ளது.

இது சம்பந்தமாக ஊர்காவற்றுறைப் பொலிசாருக்குச் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. து. ஜெயக்குமார் தலைமையில் சென்ற கோஷ்டியினர், ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். இப்பெண்ணைக் கடத்துவதற்கு பயன்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் கார் ஒன்றை வேலணை தெற்குப்பகுதியிலிருந்து பொலிசார் கைப்பற்றிவிசாரணைக்காகபொலிஸ் நிலையத்தில் வைத்துள்ளனர்.

நேற்றிரவுவரை, காணமற்போனபெண் கண்டுபிடிக்கப்படவில்லை.

## சங்கிலிதிருடி விழுங்கிறாராம: பெண்ணுக்கு 'எக்ஸ்ரே'

(பண்டத்தரிப்பு)

சிறுமியின் சங்கிலியைத் திருடி வாயில்போட்டு விழுங்கிய பெண்ணை 'எக்ஸ்றே' எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு மல்லாகம் நீதிபதி திரு. எம். டி. யேசுரத்தினம் சிறைச்சாலை சுப்பிரிண்டனுக்கு உத்தரவிட்டார்.

பண்டத்தரிப்பு பஸ்நிறுத்துமிடத்தில் தமது தாயுடன் நின்ற விஜரூபி என்ற 4 வயதுச் சிறுமியின் சங்கிலியை அறுத்து வாயில்போட்டு விழுங்கியதாக வள்ளியம்மா என்ற 29 வயது இளம் குறவப் பெண் மீது குற்றம்சாட்டப்பட்டு மல்லாகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

அப்பெண் குற்றத்தை ஒப்புக்கொண்டதையடுத்து அடுத்தமாதம் 1ம் திகதி வரை ரிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்ட நீதிபதி 'எக்ஸ்றே' எடுக்குமாறும் பணித்தார்.

சங்கானைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. இராசையா, கான்ஸ்டபிள் குணரத்தின ஆகியோர் விசாரணை நடத்தினர். [இ]

## விமான நிலையம் மீண்டும் திறக்கப்பட்டது

(காலி)

காலியிலிருந்து பத்துமைல் தூரத்திலுள்ள கொக்கலை விமான நிலையம் மீண்டும் திறந்துவைக்கப்பட்டது இத் திறப்புவிழாவில் பாதுகாப்பு அமைச்சின் காரியதரிசி திரு எல். ஏ. தர்மபால, விமானப் படைத்தளபதி ஹரி குணதிலகா, காலி மேலதிக அரசாங்க அதிபர் வை டபிள்யு குணவர்த்தன, தென்பகுதி தளபதி ஏ. டபிள்யு. தம்பிராஜா, காலி பொலிஸ் அதிபர் சி. தர்மராஜா ஆகியோர் கலந்துகொண்டனர் இவர்கள் சேட் ஹெலிகொப்டர்மூலம் மானநிலையத்தை வந்தடைந்னர்.

இவ்விமான நிலையத்தில் ஞாயிற்றுக்கிழமை முதல் உல்லாசப் பிரயாணிகள் வரத் தொடங்குவார்கள் எனத் தெரியவருகிறது. (இ)

## குழந்தைக்கு நஞ்சூட்டி தந்தை தற்கொலை!

[வேலணை]

குடும்பத்தில் ஏற்பட்ட சச்சரவினால், தந்தையும் 4 மாதக் குழந்தையும் பலியானார்கள்.

இச்சம்பவம் புங்குடுதீவு பத்தாம் வட்டாரத்தில் நிகழ்ந்துள்ளது.

இறந்தவரான இலகப்பிள்ளை திருஞானசம்பந்தனின் (31 வயது) மனைவி சாட்சியமளிக்கையில், கணவர் தம்மிடம் பலசந்தர்ப்பங்களில் பணம் கேட்டதாகவும், மறுப்புத்தெரிவிக்கவே பலதடவைகள் வாக்குவாதம் ஏற்பட்டதாகவும், சம்பவதினம் யாழ்ப்பாணம் சென்று தமது கணவர் ஒரு போத்தல் நச்சுத்திராவகம் வாங்கிவந்ததாகவும் அன்றும் பணம்கேட்டு வாக்குவாதம் ஏற்படவே நச்சுத்திராவகத்தை தனது 2 வயதுடைய ராகினிக்குப் பருக்கியதாகவும் அப்பொழுது தாயார் ஓடிச் சென்று குழந்தையைத் தூக்கிக்கொண்டு அயலவரின் உதவியுடன் ஆஸ்பத்திரியில் சேர்த்ததாகவும், அதன்பின் அறையில் கிடந்த 4 மாத இராஜினிக்குக் கணவர் நஞ்சு பருக்கியதாகவும் அக்குழந்தை இறந்துவிட்டதாகவும் கூறினார்.

மரணவிசாரணையை புங்குடுதீவு திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. ஆ. நமசிவாயம் நடத்தினர்.

இறந்த திருஞானசம்பந்தனின் மரணம் தற்கொலை எனவும் இறந்த 4 மாதக் குழந்தையான இராஜினியின் மரணம் கொலையெனவும் மரண விசாரணை அதிகாரி தீர்ப்பளித்தார். சாட்சிகளை ஊர்காவற்றுறை பொலிஸ் சார்ஜண்ட் திரு. அபயரத்தின ஆஜர்செய்திருந்தார்.

## பாலைதீவு, கச்சதீவு உற்சவம்

[உடுப்பிட்டி]

பாலைதீவு புனித அந்தோனியார் ஆலய வருடாந்த உற்சவம் மார்ச் மாதம் 5ந் தேதியும். கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய உற்சவம் மார்ச் மாதம் 12ந் தேதியும் நடைபெறவுள்ளதாகப் பரிபாலகர் அருட்திரு கொன்ஸால் வேய்வ அறிவித்துள்ளார்.

## ஆலோசனைக் கூட்டம்

[யாழ்ப்பாணம்]

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள முழங்காவில் குழாய்க்கிணறு படித்த வாலிபர் திட்டத்திற்கான காணிவழங்கல் சம்பந்தமான ஆலோசனைக்கூட்டம் இன்று காலை அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் மாவட்ட காணிஅலுவலர் கலந்துகொள்வார். [செ]

## திருத்தம்

நேற்று வெளியான 'ஈழநாடு' முதலாம் பக்கத்தில் இடம் பெற்ற தலைப்புச் செய்தியில், சன்சோனி கமிஷன் முன் சாட்சியமளித்த வண்ணார்பண்ணை தென்கிழக்கு கிராம சேவகரின் பெயர் திரு. வை. கா. தளையசிங்கம் என்றிருப்பதற்குப் பதிலாக திரு. கே தனபாலசிங்கம் என்று பிரசுரிக்கப்பட்டுள்ளது. அவர் அளித்த சாட்சியத்திலும் ''என்னைப் பொறுத்தவரை யாழ்ப்பாணத்தில் கலவரம் வராது. தமிழர்கள் அப்படிக் கலவரம் செய்யமாட்டார்கள். ஏன் சந்தேகிக்கின்றீர்கள்?'' என்று இருக்க வேண்டும் இத்தவறுக்கு வருந்துகிறோம். (ஆ-ர்)

## கடன் தொல்லையால் தற்கொலை

[கரணவாய்]

தீராத நோயினாலும் கடன் தொல்லைகளினாலும் கஷ்டப்பட்ட தொழிலாளி ஒருவர் வேப்பமரத்தில் சேலையொன்றினால் சுருக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டார்.

வல்வெட்டி கருக்காயடி என்னுமிடத்தைச் சேர்ந்த முத்தன் வைரவன் வயது 60 என்பவரே இவ்வாறு தற்கொலைசெய்துகொண்டவராவார். இவரின் மரணம் தொடர்பாக உடுப்பிட்டி திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு. எம். வி. புவனேந்திரன் ஜே. பி. விசாரணை நடத்தினர். இறந்தவரின் மனைவி தங்கம் சாட்சியமளிக்கையில் கூறியதாவது:

''இறந்தவரை முப்பது வருடங்களுக்கு முன் திருமணம் செய்தேன். எங்களுக்கு மூன்று பிள்ளைகள். இறந்தவர் கடந்த பத்துவருடங்களாக இருதய நோயினால் மிகவும் கஷ்டப்பட்டார் பலவிடங்களிலும் சிகிச்சைசெய்தும் நோய் குணமாகவில்லை. கடந்த ஒரு மாதமாக தனிப்பட்ட வைத்தியர் ஒருவரிடம் சிகிச்சைபெற்று வந்தார். வைத்தியசெலவுகளாலும் பிறசெலவுகளாலும் பதினையாயிரம் ரூபாவரையில் கடன்பட்டிருந்தோம். இதனால் இறந்தவர் மிகவும் கவலையடைந்தவராகக் காணப்பட்டார். சம்பவதினம் இரவு இறந்தவர் உணவு உட்கொண்டபின் படுத்துவிட்டார். நானும் மகளும் சாப்பாட்டை முடித்தபின் படுத்துவிட்டோம். அதிகாலை நாலரை மணியளவில் நாங்கள் எழுந்தபோது இறந்தவரைப் படுக்கையில் காணவில்லை, விடிந்த பின்னும் இறந்தவரைக் காணாமையால், தேடப்புறப்பட்ட போது எனது பெருமகன் வந்து காலஞ்சென்றவர் பனங்காணியில் இறந்துகிடப்பதாகச் சொன்னார். நான் அங்கு ஓடினேன். அங்கு இருந்தவர் வேப்பமரக் கிளையொன்றில் சேலையினால் சுருக்கிட்டு தொங்கிக்கொண்டிருந்தார். தீராத நோயினாலும் கடன்தொல்லையினாலும் எனது கணவர் தற்கொலை செய்திருக்கலாமென நினைக்கினேன்''

வேறு பலரும் சாட்சியமளித்தபின் மரணவிசாரணை அதிகாரி தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## மீண்டும் ஒலிக்கிறது

(உடுப்பிட்டி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள அரசாங்க பாடசாலைகளில் வேலை அனுபவப் பாடலான ''உலகில் உயர் நாடு இலங்காவே...'' என்ற பாடல் மீண்டும் ஒலிக்கத் தொடங்கியுள்ளது.

இப்பாடல் 1965ம் ஆண்டு பதவியேற்றதேசியஅரசாங்கத்தில் கல்வி கலாச்சார அமைச்சராகவிருந்த திரு. ஐ. எம். ஆர். ஏ. ஈரியகொல்லையினால் இயற்றப்பட்டு, அரசாங்கபாடசாலைகளில் அறிமுகப்படுத்தப்பட்ட சிரமதான வேலைகளின்போது பாடப்பட்டுவந்தது.

1970ம் ஆண்டு பதவியேற்ற ஐக்கியமுன்னணி அரசாங்கம் இப்பாடலைத் தடுத்து வைத்திருந்தது.

## இயக்குநர் சபை உறுப்பினாகள்

[நெல்லியடி]

கட்டைவேலி-நெல்லியடிப் ப. நோ. கூ. சங்கத்திற்கான புதிய இயக்குநர் சபை, உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கத்தின் சிபார்சின் பேரில் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

இயக்குநர்களாக திருவாளர்கள் ரி. கந்தசாமி, க. இராஜரட்ணம், க. நடராசா, ந. பாஸ்கரன், சி. சதானந்தன், ரி. தம்பையா, ஏ. ராஜரட்ணம், எம். பாலசிங்கம், பி. பி. தாமு ஆகியோர் நியமனம் பெற்றுள்ளனர். (உ)

## இடதுசாரித்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தைக்கண்டித்தும் கலாநிதி என். எம். பெரேரா, திரு. பீட்டர் கெனமன், திரு. ரி. பி. சுபசிங்கா, திரு. அ. வைத்திலிங்கம், திரு. எம். சி. சுப்பிரமணியம் ஆகியோர் உரையாற்றுவர்.

கலாநிதி என். எம். பெரேரா நாளைக்காலை கட்சிக் காரியாலயத்தில் தொழிற்சங்க உறுப்பினர்களுடன் கலந்துரையாடுவார். நாளை மறுதினம் காலை அவர் கட்சிஉறுப்பினர்களுடன் மகாநாட்டுக்குவரும் அரசியல் பிரேரணை பற்றி விளக்கி உரையாற்றுவார். [க]

## முதலமைச்சர்...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

கள் குழுக்கள் அமைக்கப்படும். தலைசிறந்த விளையாட்டு வீரர்கள் முதுமைப் பருவத்தை அடைந்ததும் அவர்களுக்கு அரச உதவி. தமிழ்நாட்டின் காகித ஆலைச் செயற்குறிப்பைத் தீவிர ஆலோசனைக்கு எடுப்பது. அரசு ஊழியர்களுக்குச் சம்பள உயர்வு. சிறு தொழிற்சாலைகளை ஊக்குவிக்கப் பரவலான தீவிர திட்டங்கள் ஆகியவை மேற்கொள்ளப்படும்'' என்றும் நிதி அமைச்சர் தெரிவித்தார்.

இப்பத்திரிகை 'ஈழநாடு. லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்ஹோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம்ஆண்டு பெப்ரவரி மாதம் 21-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Srilanka